மரக் கோட்டை!

ராணி காமிக்ஸ்

கருத்துப் போட்டி எண்-20 முடிவு

"பழிக்குப் பழி!" சித்திரக் கதை கருத்துப் போட்டியில் கலந்து கொண்டவர்களில், என். எஸ். மீனாட்சி சுந்தரம் (திருநெல்வேலி ஜங்ஷன்), ச. இந்திராதேவி (சென்னை-13), ச. அண்ணாதுரை (பம்பாய்-30), எஸ். கீதா மகேசுவரி (சென்னை-80), வி. ராமன் (மானாமதுரை), வை. தமிழ்செல்வி (காளப்பநாயக்கன்பட்டி), எம். சுமதி (பாப்பம்பாளையம்), ஏ. விசாலாட்சி ஆனந்தன் (சென்னை-49), ஏ. விஜயலட்சுமி (ஈரோடு), பி. லீலா மல்லிகா (சென்னை-85) ஆகியோர் பாராட்ட தகுந்த விதத்தில் கருத்துக்களை எழுதி இருந்தார்கள்.

ஆனால் மிகச் சிறந்த கருத்தை எழுதியவர் என்று தேர்ந்து எடுக்கப்பட்டு, அதற்காக ரூ. 50 பரிசு பெறுபவர்:—

கே. இஸ்மாயில்,
கேத்ரின் ஃபால்ஸ்,
அரவேனு (போஸ்ட்.),
நீலகிரி (634 201)

"பழிக்குப் பழி" கதையில் கதாநாயகன் டான், குற்றவாளிகளை கண்டுபிடித்து தீர்த்துகட்டும் வெறியிலும், அதன் மூலம் பணம் சம்பாதிக்கும் பாதையில் செல்கிறான். ஜானி என்ற கொள்ளைக்காரனை சுட்டுக் கொல்ல எத்தனிக்கும்போது அவன் தன் தம்பி பீட்டர் என்று அறிந்து "மற்ற குற்றவாளிகளைப் போல் இவனையும் நான் கொன்று இருந்தால், என் தம்பியை இழந்து இருப்பேனே!" என மனம் வருந்துகிறான். இந்த கட்டமே எனக்கு பிடித்தது.

காரணம், காலச் சூறுவளியில் கொலை, கொள்ளை என்று பிரிந்து பறந்து இரண்டு சகோதர பட்டங்கள் இங்கே சந்திக்கின்றன. குற்றவாளிகளைக் கொல்வதே தொழிலாக கொண்ட அண்ணன் இங்கே மனம் மாறுகிறான். சட்டத்தின் பிடியில் இருந்து தப்பி வந்த தம்பி, தண்டனையை ஏற்க தயார் ஆகிறான்.

கதையின் முக்கியமான கரு, செய்தி இங்கேதான் மறைந்து இருக்கிறது. இந்த கட்டம் மட்டும் கதையில் இல்லாவிட்டால் நல்ல அண்ணன் தம்பி இருவரை நாம் இழந்து இருப்போம். இருவா உள்ளும் மறைந்து கிடந்த மனித பண்பு, நாகரீகம் ஆகியவற்றை வெளியே கொண்டுவர அந்த கட்டம் கதையின் முக்கிய அம்சமாக இடம்பெற்றது. இதன் காரணமாக அந்த சம்பவம் என்னைக் கவர்ந்தது."

ராணி காமிக்ஸ்— 30
(மாதம் இருமுறை இதழ்)

TV

செப்டம்பர் 15—30
1985

மரக்கோட்டை!

மெக்சிகோ நாட்டில் இருந்து விடுதலை அடைய டெக்சாஸ் படைகள் அமெரிக்கப் படைகளுடன் சேர்ந்து போரிட்டன. 1836-ம் ஆண்டு மார்ச் 7-ந் தேதி அலமோ என்ற இடத்தில் நடந்த முக்கிய போரில், மெக்சிகோ படைக்கு வெற்றி கிடைத்தது.

அந்த வெற்றிக்கு மெக்சிகோ படை தளபதிகள்தான் காரணம் குறிப்பாக ஜெனரல் குரூஸ் என்பவர் முக்கிய காரணம். இளமையும் அழகும் கொண்ட அவர் அஞ்சா நெஞ்சன். போர் தந்திரத்தில் அவர் ஒரு குள்ளநரி.
ஜெனரல் குரூஸ் அவர்களே! அதோ பாருங்க! டெக்சாஸ் படைகள் திரும்பி ஓடுகின்றன!
அவர்கள் திரும்பி ஓடுவதை தடுக்க வேண்டும்! வாள் ஏந்திய நமது வீரர்கள் பாய்ந்து செல்லட்டும்!

டெக்சாஸ் படைகள் தப்பி ஓடுவதை தடுக்கவும், அவைகளை அழிக்கவும் ஜென்ரல் குரூஸ் திட்டம் போட்டார்.
கர்னல் லூயிஸ்! நீங்க உங்க படைகளுடன் அந்த மலை கணவாய் போய், அங்கே இருக்கும் அமெரிக்க படைகளின் பின்புறம் போங்க. அமெரிக்க பீரங்கி படைகளைப் பிடியுங்க. அவர்களை தப்பி ஓடாமல் செய்யுங்க!
ஜெனரல்! இதோ போகிறேன்!

போர் நடந்த இடத்தையொட்டி ஒரு மலை இருந்தது. அதற்கு பின்புறம் பெரிய கணவாய் இருந்தது. அங்கேதான் அமெரிக்க பீரங்கிப் படைகள் பீரங்கியால் சுட்டுக்கொண்டு இருந்தன. அவர்கள் கவனத்தைத் திசை திருப்ப ஜெனரல் குருசும் சில அதிகாரிகளும் மலை மீது ஏறினார்கள்.



கணவாயில், அமெரிக்க குதிரைப் படை 16—வது பிரிவு தயாராக நின்றது. அதன் தளகர்த்தர் பெயர் கர்னல் ஆலிவர் பிராண்ட். டெக்சாஸ்காரர்.
மலை மீது மெக்சிகோ படையினர். அவர்கள் நம்மை தாக்கவா வருகிறார்கள்?
கர்னல்! உங்க படைக்கு அமெரிக்க ஜெனரல் ஸ்காட்டிடம் இருந்து ஒரு உத்தரவு!
மெக்சிகோ படையினர், தங்களுக்கு பின்புறமா வந்து தாக்க வருவதை கர்னல் ஆலிவர் புரிந்துகொண்டார். அந்த நிலையில்...
சார்! உங்க படைகளை முன்னுக்கு கொண்டு போய் போரில் ஈடுபட ஜெனரல் உத்தரவு!
மெக்சிகோ படையினர் கணவாய் வழியாக எங்கள் பின்புறம் வந்து தாக்க திட்டமிட்டு உள்ளனர். அபார திட்டம்! ஆனால் என்னிடம் நடக்காது!

ஜெனரல் உத்தரவுக்கு மாறுக கர்னல் ஆலிவர் வேறு திட்டம்போட்டார்.
சார்! ஜெனரல் உத்தரவுக்கு கீழ்படிய மாட்டீங்--களா?
ஜெனரலுக்கு என் வாழ்த்துக்கள். எனக்கு கண், காது, மூளை எல்லாம் இருக்கு. அந்த மலைக் கணவாய் பாதையை எனது படை--யினரைக் கொண்டு அடைக்காவிட்டால், அமெரிக்க பீரங்கி படை பிடிபடும். அது மட்டும் அல்ல. மற்ற படைகளுக்கும் ஆபத்து! வீரர்களே! என்னை பின்தொடருங்க!

ஜெனரல் உத்தரவுக்கு கீழ்படியாவிட்டால் தண்டனை கடுமையாக இருக்கும். அதே நேரத்தில் மெக்சிகோ படையினர் பின்புறமா வந்து தாக்குவதை தடுக்காவிட்டால் படை முழுவதும் சர்வ நாசமாகும். இந்த நிலையில் கர்னல் ஆலிவர் சுதந்திரமாக முடிவு எடுத்தார்.
சார்! நீங்க செய்றது ஜெனரலை மீறும் செயல்.
அந்த மலை மீது இருக்கும் மெக்சிகோ வீரர்களை நோக்கி ஒரு குண்டை சுடு!

கணவாயை நோக்கி 16–வது குதிரைப் படையுடன் கர்னல் ஆலிவர் பாய்ந்து சென்றதை, மெக்சிகோ ஜெனரல் குரூஸ் பார்த்துவிட்டார்.
ஜெனரல்! அமெரிக்க "ரிசர்வ்" படையினர் நமது திட்டத்தை யூகித்துவிட்டனர்!
அப்படித்தான் தெரிகிறது! உம்! எதிர்பாராத திருப்பம்!


பின்புறமாக தாக்க வந்த மெக்சிகோ படை பிரிவை, அமெரிக்க 16–வது குதிரைப் படை நேருக்கு நேர் சந்தித்தது!
உம்! தாக்குங்க! போர்! போர்!


அமெரிக்க குதிரைப் படையும், மெக்சிகோ குதிரைப் படையும், அந்த குறுகலான கணவாயில் மோதின.
ஐயோ! நம்ம கர்னல் லூயிஸ் பிடிபட்டு விட்டாரே!
டெக்சாஸ் படை தப்பி ஓட வழி ஏற்பட்டு விட்டது!

தனது போர் திட்டம் வெற்றி பெறாததால் ஜெனரல் குரூஸ் ஆத்திரம் அடைந்தார்.
அலமோ போரில் எங்களுக்கே வெற்றி! டெக்சாஸ் படைகளும், அமெரிக்க படைகளும் இன்று, வாபஸ் ஆகி ஓடலாம். ஆனால் நாளை, இல்லை அதற்கு மறுநாள் நான் அவர்களை நசுக்குவேன்!

ஜெனரல் குருசுக்கு இன்னொரு அதிர்ச்சி காத்திருந்தது. பின்வாங்கிய அமெரிக்க படைகள் சும்மா போகவில்லை!
வாபஸ்! ஜெனரல் ஸ்காட் உத்தரவு! பின்வாங்கு!
வாபஸ் வாங்கும் முன் அதோ அந்த மலை மீது இருக்கும் எதிரிகளைத் தாக்குகிறேன்! உம், சுடு!

அந்த பீரங்கி குண்டு குறி தவறாமல் தாக்கி, மெக்சிகோ படை அதிகாரிகள் பலர் உயிரை குடித்தது. தன் நிகர் இல்லா தளபதி குருசுக்கு மீண்டும் ஒரு அதிர்ச்சி!
ஆ! ஐயோ!

சண்டை முடிந்துவிட்டது. டெக்சாஸ், அமெரிக்கப் படையினர் பின் வாங்கத் தொடங்கினர். திடீர் தாக்குதல் நடத்தி, மெக்சிகோ ஜெனரல் குருசின் திட்டத்தை முறியடித்த கர்னல் ஆலிவர் கூறினார்—
மெக்சிகோ படையினரும் பின்வாங்குகிறார்கள். நம் படை முழுவதும் காப்பாற்றப்பட்டது. இனி நாம் பின்வாங்க பியூக்ளை ஊது!

அமெரிக்க படைகளும், டெக்சாஸ் படைகளும் பத்திரமாக பின்வாங்கின! அதற்கு உதவி செய்த கர்னல் ஆலிவர் ஜெனரல் ஸ்காட்டை சந்தித்த போது, வரவேற்பு, வேறு விதமாக இருந்தது.
நமது முழு படைகளும் உயிருக்கு போராடிக்கொண்டு இருக்கும்போது, 16-வது படை பிரிவை போரில் ஈடுபட சொன்னேன். நீ என் உத்தரவுக்கு கீழ் படியவில்லை. அதனால் உன் மீது ராணுவ கோர்ட் விசாரணை நடக்கும்!

ஸ்காட்டின் உத்தரவு கர்னல் ஆலிவரை ஆத்திரம் அடையச் செய்தது. கூர்மையான வாளைத் தாங்கி போர் புரிந்த அவர் கை, கோபத்தில் தோள்பட்டை ராணுவ சின்னத்தை பிய்த்து எறிந்தது.
இந்த தளபதியின் முட்டாள்தனமான உத்தரவை மீறி, படைகளை காப்பாற்றும் பணியில் ஈடுபட்டேன். அதற்கு பரிசு ராணுவ கோர்ட்டு விசாரணையா? இவர்களும் ஆச்சு. இவர்கள் ராணுவமும் ஆச்சு! போய் வருகிறேன்! குட் பை!

ராணுவ சேவைக்கு தலை முழுக்கு போட்ட ஆலிவரின் ரத்தம் "பழிக்குப் பழி!" என்று சூடாகி சுழன்றது 20 ஆண்டுகள் அந்த சூடு ஆறவே இல்லை!

கடைசியாக, டெக்சாஸ் வீரர்கள் சுட்ட பீரங்கி குண்டு ஜெனரல் குருசைத் தாக்கியது. அதனால் அவர் வாழ்க்கை பாதிக்கப்பட்டு 20 ஆண்டாக பழிவாங்க காத்து இருந்தார்!

ஒரு மனிதனின் வாழ்க்கையிலும் சரி, ஒரு தேசத்தின் சரித்திரத்திலும் சரி, 20 ஆண்டுகள் என்பது மிக நீண்ட கால கட்டம்! ஆனால் ஜெனரல் குரூசிடமும், கர்னல் ஆலிவரிடமும் அந்த 20 ஆண்டுகள், அவர்கள் உள்ளக் கொதிப்பை அடக்க பயன்படவே இல்லை!
நண்பரே ரெட் கிளா! உங்களது செவ்விந்திய சாம்ராஜ்ஜியத்தை வெள்ளையர்கள் ஆக்ரமித்துவிட்டனர். விரைவில் இந்த மண் செவ்விந்தியர்களுக்கு சொந்தம் ஆக வேண்டும். அதற்காக வெள்ளை ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போர் புரியுங்கள். வெற்றியின் விளிம்புக்கு நான் உங்களை அழைத்துச் செல்கிறேன்!
கால்கள் ஊனமுற்றாலும், உள்ள உறுதி கொண்ட உயிர் நண்பரே! உமது போர் தந்திரமும், எங்களது வீரமும் ஒன்று சேர்ந்து வெள்ளையர்களை விரட்டட்டும்!

அமெரிக்காவில் வந்து குடியேறிய வெள்ளைக்காரர்கள் மீது, அமெரிக்க பூர்வ குடிமக்களாகிய செவ்விந்தியர்கள் ஆரம்பத்தில் இருந்தே கொண்ட பகை, 20 ஆண்டுக்கு பின் டெக்சாஸ் பகுதியில் புதிய வடிவம் பெற்றது!
நண்பரே ரெட் கிளா! போர் நிலவரம் என்ன?
உங்க யோசனைப்படி செய்தோம். வெள்ளை வீரர்கள், எங்களை பின்தொடர்ந்து வந்து பொறியில் சிக்கிக் கொண்டனர். நரிகள் போல் பாய்ந்து நாலு பக்கமும் தாக்குகிறோம்!
அந்த ஊனக் கால் தளபதியின் குள்ள நரி போர் தந்திரங்கள், செவ்விந்தியருக்கு வெற்றி தேடித் தந்தது.
முதலில், துப்பாக்கிகளையும் வெடி மருந்துகளையும் கைப்பற்றுங்க! பிறகு வெள்ளை வீரர்களை சின்னாபின்னப் படுத்துங்கள்! பழிக்குப் பழி! அஃ! அஃ! அஃகா!


வெற்றி மேல் வெற்றி குவிய, டெக்சாசில் உள்ள பல பூர்வகுடி செவ்விந்திய மக்கள் கால் ஊன தளபதியின் தலைமையின் கீழ் ஒன்று பட்டனர்.
கால் ஊன தளபதியே! என் பெயர் டெல். மெஸ்காலிரோ பகுதி செவ்விந்திய தலைவன். உங்க தலைமையை ஏற்று, அமெரிக்கர்களை ஒழிக்க சபதம் பூணுகிறேன்!
செவ்விந்தியர் களின் சுதந்திர தேசம் உருவாகிக்கொண்டு வருகிறது!

கால் ஊன மர்மத் தளபதியின் உத்திகளால் செவ்விந்தியர் வெற்றிப் பாதையில் நடந்தனர்.
அதோ அந்த கோட்டை எரிவது போல, டெக்சாஸ் முழுவதும் எரிய வேண்டும்! அந்த சாம்பலில் செவ்விந்திய சுதந்திரம் பூக்க வேண்டும்! ஆகா!


அது, தென் டெக்சாசில் உள்ள கான்சோ கோட்டை. அமெரிக்க குதிரைப் படையின் முக்கிய தளம் அது. அங்கு இருந்த தலைமைத் தளபதி, செவ்விந்தியரின் எழுச்சியை புரிந்து கொண்டவர் என்றாலும், பாலைவனப் பகுதியில் உள்ள அமெரிக்க கோட்டைக்கு மேலும் மேலும் சப்ளை அனுப்பி வந்தார்.
ஸ்டீபன்! வெற்றி உண்டாகட்டும்!
பாலைவன கோட்டைக்கு போகிறோம்!

பாலைவன பகுதியில் உள்ள அமெரிக்க கோட்டைக்கு உணவு, துப்பாக்கி, வெடி மருந்து ஆகியவற்றை கொண்டு செல்லும் வண்டிகளை செவ்விந்தியர் பார்த்தனர்!
சார்! அதோ. செவ்விந்தியர்!
உம்! சப்ளை வண்டிகளை பாதுகாப்பு அரண் போல் சுற்றி நிறுத்துவோம்!

வண்டிகளை வட்டமாக நிறுத்தினர். அவற்றிற்கு பாதுகாப்பா வந்த வீரர்கள் சண்டைக்கு தயார் ஆயினர்.
செவ்விந்தியர் தாக்கத் தொடங்கி விட்டனர்!
ஒரு பக்கமா தாக்குவார்களா? அல்லது சுற்றி வளைப்பார்களா?
ஏய்! ஸ்டீபன்! உடனே வா! உன்னை கேப்டன் கூப்பிடுகிறார்!
அந்த பாதுகாப்பு படையில் வயது குறைந்த வீரன் ஸ்டீபன்தான். டெக்சாஸ்கார தோற்றம் உடையவன். அவனை கேப்டன் அழைத்து—
ஸ்டீபன்! இந்த தாக்குதலில் நாம் ஜெயிக்க முடியாது. நீ இங்கிருந்து தப்பித்து பாலைவன கோட்டைக்கு போ. சப்ளை வந்து சேராது என்ற தகவலை அவர்களுக்கு சொல்!
சரி சார்!
சப்ளை வண்டிகளை செவ்விந்தியர் சுற்றி வளைத்து கடுமையாக தாக்கிய போதிலும் ஸ்டீபன் மின்னல் வேகத்தில் ஒரு குதிரையில் பாய்ந்தான்.
ஏய்! ஒருவன் தப்பி போகிறான்!


ஸ்டீபன் குதிரை காற்றாய் பறந்தது. செவ்விந்தியர் அவனைப் பின்தொடரவில்லை. கொஞ்ச தூரம் போய் அவன் திரும்பிப் பார்த்தபோது, சப்ளை வண்டிகள் தீப்பிடித்து எரிந்தன!
வண்டிகள், வீரர்கள் எல்லாம் சர்வ நாசம்!


30 மைல் தூரத்தில் இருந்த பாலைவன கோட்டையை ஸ்டீபன் பரபரப்புடன் வந்து அடைந்தான். சப்ளையை எதிர்பார்த்து இருந்த வீரர்கள் அதிர்ச்சி அடைந்தனர்!
ஏய்! கான்சோ கோட்டையில் இருந்து சப்ளை வரவில்லையா?
செவ்விந்தியர் தாக்கி நாசம் செய்துவிட்டனர். நான் உடனடியா கர்னலை பார்க்கணும்!


ஸ்டீபன் பாலைவன கோட்டை கர்னலை சந்தித்து நடந்ததைக் கூறியபோது, ஒற்றர் படை தலைவர் கார்சன் அங்கே வந்தார்.
இங்கிருந்து 30—வது மைலில் 200 செவ்விந்தியர் திடீர் தாக்குதல் நடத்தி, சப்ளை வண்டிகளை பிடித்து நாசம் செய்துவிட்டனர்!
அப்படியா? இங்கே 8 மணி நேரம் போதுமான உணவே உள்ளது. அங்கே தாக்கிய செவ்விந்தியர் இங்கேயும் வருவார்கள்!
ஆம்! கர்னல்! நாம் பெரிய ஆபத்தில் மாட்டிக்கொண்டு விட்டோம்!


ஸ்டீபன் ஓய்வு எடுக்க ஆசைப்பட்டான். பிறகு கோட்டை கர்னல், சார்ஜெண்டை அழைத்து—
சார்ஜெண்ட்! வீரர்களைத் தயார்படுத்து! கோட்டை காவல் வீரர்கள் விழிப்பா இருக்க வேண்டும்! 5 மணி நேரத்தில் செவ்விந்தியர் தாக்க வரலாம்!
இந்த இளம் வீரன் முகத்தை எங்கோ பார்த்த நினைவு இருக்கே! இவனை அல்லது இவனைப் போல் இன்னொருவனை இதற்கு முன் நிச்சயம் பார்த்து இருக்கேன்!

எப்படியும் பாலைவன கோட்டையை செவ்விந்தியர் தாக்குவார்கள் என்று அமெரிக்க வீரர்கள் எதிர்பார்த்தது, சில மணி நேரத்தில் உறுதிப்பட்டது.

அந்த பாலைவன கோட்டை 20 அடி உயரம் இருந்தது. மர தடிகளால் அமைக்கப்பட்டு இருந்தது. பாய்ந்து வந்த செவ்விந்தியர்களுக்கும், வெள்ளை வீரர்களுக்கும் சண்டை மூண்டது.

கோட்டை பாதுகாப்பில் இருந்து அமெரிக்க வீரர்கள் சுட்டார்கள். செவ்விந்தியர் திறந்தவெளியில் இருந்து போரிட்டனர். கோட்டை மீது அவர்களால் ஏற முடியவில்லை.
கால் ஊன நண்பரே! கோட்டை உயரமா இருப்பதால் உள்ளே போக முடியவில்லை. சண்டை நீடித்தால் நமக்குதான் சேதம் ஏற்படும். என்ன செய்யலாம்?
அதற்கு ஒரு வழி சொல்கிறேன். பிடிபட்ட சப்ளை வண்டிகளை அதி வேகமாக பறக்கக்கூடிய குதிரைகளில் கட்டி இழுத்து போங்க!

அந்த கால் ஊன மர்ம தளபதியின் யோசனைப்படி நான்கு வண்டிகளை செவ்விந்தியர்கள் மின்னல் வேகத்தில் இழுத்து வந்தார்கள்.
உம்! வண்டிகளை கோட்டை மதில் அருகே கொண்டு போ!

அந்த வண்டி மறைவில் இருந்து செவ்விந்தியர் சுட்டனர் இநத மாதிரி யோசனைகள் திடீர் என்று செவ்விந்தியர்களிடம் எப்படி உதயம் ஆகிறது என்று கார்சன் ஆச்சரியம் அடைந்தார்.
வண்டிகளை இங்கே நிறுத்த காரணம் என்ன சார்?
செவ்விந்தியர் முரட்டுத் தனமாதான் தாக்குவார்கள். ஆனால் இப்போ, அவர்கள் சில தந்திரங்களை கையாள்வது ஆச்சரியமா இருக்கு!


இப்படி அமெரிக்க வீரர்கள் குழம்பிக்கொண்டு இருக்கும்போது, பல செவ்விந்தியர்கள் குதிரைகளில் பாய்ந்து வந்தனர்.
உம்...பறந்து போ!

வண்டி உயரத்துக்கு மேல் 6 அடி உயரம்தான் கோட்டை இருந்தது. சக்திவாய்ந்த செவ்விந்திய குதிரைகள், அந்த வண்டிகளில் லாவகமாக ஏறி, கோட்டையை ஒரே உந்தில் தாண்டின!
இந்த மரக் கோட்டையை வைத்தா மனக் கோட்டை கட்டுகிறீர்கள்?

அவ்வளவுதான்! சரமாரியாக செவ்விந்தியர்கள் பாய்ந்து உள்ளே வந்தனர்! கோட்டைக் கதவையும் திறந்தனர். பயங்கர சண்டை நடந்தது!
உம்! விடாதே! சுட்டுத்தள்ளு!
ஆ!

மொத்தத்தில் செவ்விந்தியர் கை ஓங்கியது! அதனால் கோட்டை தளபதியும், ஒற்றர் படை தலைவர் கார்சனும் பேசிக்கொண்டனர்—
கார்சன்! நம்மால் அதிக நேரம் தாக்குப்பிடிக்க முடியாது. இந்த கோட்டை தளபதி என்ற முறையில் சொல்கிறேன். தப்பி ஓடி கான்சோ கோட்டை போய் தகவல் சொல்! உன்னுடன் அந்த கோட்டையில் இருந்து வந்த இளம் வீரனையும் கூட்டிச் செல்!
உடனே கார்சன், அந்த இளம் வீரன் இருக்கும் இடம் போனார்.
இப்போ இரண்டாவது தடவையா தப்பி ஓடுகிறேன்!
நீ நினைப்பது தவறு. நமக்கு கடமைதான் முக்கியம். வா ஓடி விடுவோம்!
இருவரும் குதிரையில் ஏறி புறப்பட்டனர்.
மெயின் கேட் வழியாக போவோம்! வேறு வழி இல்லை! வா!

எல்லா செவ்விந்தியர்களும் கோட்டைக்குள் நுழைந்துவிட்டதால் மெயின் கேட் வழியாக அவர்கள் எளிதாக தப்பித்தனர்.
ஆ!
அவர்கள் தப்பித்து ஓடிய அதே நேரத்தில் செவ்விந்திய வீரர்கள் ஒரு பல்லக்கில் ஒருவரைத் தூக்கி வந்ததை கார்சன் கவனிக்கத் தவறவில்லை!
கோட்டைக்குள் போன பல்லக்கைப் பார்த்தாயா? அதில் இருந்த மனிதரின் முகம், என்னிடம் சலனத்தை ஏற்படுத்துது. அந்த ஆள்...?
அது அவ்வளவு முக்கியமான விஷயமா?


பல்லக்கில் இருந்தது யார்? செவ்விந்திய பழங்குடிகளை இணைத்தவர் அவர்தானா? அவர்களுக்கு வெற்றிகளைக் குவிக்கும் அந்த மர்ம சூத்திரதாரி யார்? யார்?—கார்சன் மனதில் இந்த கேள்விகள் குத்தின.
“உன் எதிரியை முழுவதும் தெரிந்து கொள்!” என்பதுதான் போரின் முதல் விதி. ஆனால் நாம் நம் எதிரியைப் பற்றி தெரிந்துகொள்ளவில்லை. செவ்விந்தியர்களை ஒன்றுசேர்த்து அவர்களுக்கு போர் தந்திரங்களை கற்றுக் கொடுக்கும் அந்த மர்ம தளபதியை நாம் கண்டுபிடிக்கணும்!

கான்சோ கோட்டையை நோக்கி இரண்டு குதிரைகளும் பாய்ந்து கொண்டு இருந்தன.
கேட்க மறந்து விட்டேனே! உன் பெயர் என்ன?
என் பெயர் பிராண்ட்! ஸ்டீபன் பிராண்ட்!


ஸ்டீபன் பிராண்ட்! ஆம், 20 ஆண்டுகளுக்கு முன் அலமோ என்ற இடத்தில் நடந்த போரில் தலைமைத் தளபதியிடம் கோபித்துக் கொண்டு போன ஆலிவர் பிராண்டின் மகன்தான் இந்த இளம் வீரன் ஸ்டீபன் பிராண்ட்!
நான் நினைத்தது சரிதான்! கர்னல் ஆலிவர் மகன் நீ. முகச் சாயல் தெரிகிறதே!
ஆமா. அலமோ யுத்தத்துக்கு பின் அப்பா மிஸ்டர் பிராண்ட் என்று மட்டும் அழைக்கப்பட்டார்.

கார்சன் பழைய சம்பவத்தை நினைவுபடுத்தினார்.
உன் அப்பா மீது ராணுவ கோர்ட்டு விசாரணைக்கு ஜெனரல் ஸ்காட் உத்தரவிட்டது கொஞ்சமும் நியாயம் இல்லாதது. ஆனா, உன் தந்தை விசாரணையை ஏற்று தன் வாதத்தை எடுத்துச் சொல்லி இருக்கணும். உன் அப்பாவின் கீழ் நான் இளம் வீரனாக அலமோ போரில் ஈடுபட்டு இருந்தேன். உன் தந்தை தந்திரசாலி. தைரியசாலியும் கூட.
அப்பா, ராணுவத்தில் இருந்து விலகியதும் போலோ பிந்தோ மலைச்சரிவில் பன்றிப் பண்ணை தொடங்கினார். நான் பார்த்து பல காலம் ஆகிவிட்டது!


சப்ளை வண்டிகளை, செவ்விந்தியர் தாக்கிய இடத்தை அவர்கள் கடந்து சென்றனர்.
உன் அப்பா ராணுவத்தில் நீடித்து இருந்தால், இப்போ கான்சோ கோட்டை தளபதியாக உயர்ந்து இருப்பார். அவருக்கு கீழ் பணியாற்றுவது ஒரு அபூர்வ அனுபவம்!

கார்சன், கான்சோ கோட்டையை அடைந்ததும் ஜெனரல் கோலியை சந்தித்து, விவரம் கூறினர்.
சப்ளை வண்டிகள், பாலைவன கோட்டையை அடையும்முன், செவ்விந்தியர் நாசம் செய்தனர். அந்த வண்டிகளைக் கொண்டே கோட்டையை பிடித்துவிட்டனர்! கோட்டை கர்னலும் வீரர்களும் இந்நேரம் இறந்து இருப்பார்கள்!
என்னால் நம்ப முடியவில்லையே!

அந்தத் தளபதி கோலி வெர்ஜீனியாவில் இருந்து சமீபத்தில்தான் கான்சோ கோட்டைக்கு மாற்றப்பட்டு இருந்தார்.
செவ்விந்தியருக்கு உடனே பாடம் புகட்ட வேண்டும்! 2 குதிரைப் படை பிரிவை கொண்டு போய் மோதுவோம்! ஆடர்லி!
ஜெனரல் அவர்களே! ஒரு நிமிடம் பொறுங்க! நீங்க நினைப்பது போல் இப்போது செவ்விந்தியர்கள் முரட்டுத்தனமாக மோதும் முட்டாள் வீரர்கள் இல்லை. இப்போது அவர்கள் தந்திரம் மிக்க படை வீரர்கள். அவர்களுக்கு ஒரு ராணுவ நிபுணர் பின்னணியில் இருப்பது போல் தெரிகிறது!

ஆனால் கோட்டைத் தளபதி கோலி, ஒற்றர் தலைவர் கார்சன் சொன்னதை காதில் போட்டுக் கொள்ளவில்லை.
சார்! நான் நம்மிடம் உள்ள செவ்விந்திய வீரர்களுடன் போய் எதிரிகளின் பலம், அவர்களின் பின்னணி தலைவர் யார் என்று உளவு அறிந்து வருகிறேன்!
கார்சன்! அதற்கு எல்லாம் நேரம் இல்லை. அந்தச் செவ்விந்தியர்களை கூட்டோடு கூடாக பழிவாங்க வேண்டும். ஆடர்லி!
எஸ்...சார்!

மறுநாள் காலை. ஜெனரல் கோலி, தனது படை அணிவகுப்பை பார்வையிட்டார். அதை கார்சன் கவனித்தார்.
இந்த வீரர்கள் தைரியசாலிகள். கட்டுப்பாடு மிக்கவர்கள். இவர்களுக்கு ஆலிவர் போன்ற தந்திரசாலி தளபதியா இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்!


4 மணி நேரத்தில் படைகள் புறப்பட்டன. ஸ்டீபன் அவர்களுடன் சேர்ந்துகொண்டான். கார்சன், தன் செவ்விந்திய வீரர்களுடன் புறப்பட்டார்.
செவ்விந்தியர் அனைவரும் ஒன்றுபட்டுவிட்டதை நானும் கேள்விபட்டேன்.
ஜெனரல் கோலி என்னதான் செய்யப் போகிறாரோ?


சில மணி நேரம் கழித்து படைகள், பாலைவன கோட்டை இருந்த இட்த்தை அடைந்தபோது—

செவ்விந்தியர்கள் திடீர் என்று தாக்கினர். உடனே தளபதி கோலி—
முன்னேறிச் சென்று தாக்க பியூகிளை ஊது!

உடனே படை வீரர்கள் அனைவரும் முன்னே பாய்ந்தனர்.
அந்த செவ்விந்தியர் “மோடாக்” என்ற இனத்தினர். “கோமான் சி” இனத்தவர் எங்கே?
அதோ அந்த மலை பகுதியில் அவர்கள்!


அங்கே, செவ்விந்திய படையினர் கீழே போகும் அமெரிக்க படைகளை பார்த்தபடி தயாராக நின்றனர்!


வழக்கப்படி, செவ்விந்தியர்கள் முரட்டுத்தனமாக வந்து மோதாமல், அணிவகுத்து நின்றார்கள்.
கால் ஊன தலைவரே! நமது படை தயார்!
வெரிகுட்! முதலில் மோடாக் இன வீரர்கள் பாய்ந்து தாக்கட்டும். உத்தரவு கொடு!


அதன்படி முதலில் அமெரிக்க படை வீரர்கள் மீது மோடாக் இன வீரர்கள் பாய்ந்தனர். பிறகு ''அபாசி'' இன வீரர்கள் பாய்ந்து தாக்கினர்!
உம்! பாய்ந்து தாக்குங்க!
சார், பின்னால்...!

நாலா புறமும் பல்வேறு இன செவ்விந்திய வீரர்கள் ஒற்றுமையுடன் மின்னல் வேகத்தில் வந்ததைப் பார்த்து, ஜெனரல் கோலி நிலை குலைந்தார்.
சார்! நாம் அவர்கள் பொறியில் மாட்டிக் கொண்டோம்!
இப்போ என்ன செய்யலாம்?!

அதற்குள் எல்லா பக்கத்தில் இருந்தும் செவ்விந்தியர்கள் தாக்கத் தொடங்கினர்!

அரை மணி நேரம்தான். அதற்குள் அமெரிக்க படைக்குள் செவ்இந்தியர்கள் புகுந்து துவசம் செய்தார்கள். வேறு வழி இல்லாமல், ஜெனரல் கோலி வாபஸ் ஆக உத்தரவிட்டார்.
ஸ்டீபன் கொஞ்சம் தாக்குபிடி, படை வாபசுக்கு பியூகிள் ஊதியாச்சு. நாம் இங்கிருந்து போகிறோம்!

தலையில் படுகாயம் அடைந்த ஸ்டீபன் பத்திரமாக அழைத்து செல்லபட்டான். கார்சன், அவரது செவ்இந்திய வீரர்களுடன் புறப்பட்டார்.
பிளாசிடோ! என்னுடன் வா! நமக்கு முக்கிய வேலை இருக்கு!


கார்சன் மனதில் பெரிய கேள்வி எழுந்தது. அமெரிக்க படைக்கு இப்படி மரண அடி கிடைக்க, வியூகம் வகுத்த எதிரி தளபதி யார் என்பதுதான் அது.
பயிற்சி மிக்க நமது ராணுவத்தை சேதப்படுத்திய எதிர் தளபதி, பெரிய ராணுவ நிபுணரா இருக்கணும். அபாசி இன தலைவர் டெல்காடிடோ, கோமாஞ்சி இன தலைவர் ரெட் கிளா ஆகியோரால் இப்படி தந்திரம் செய்ய முடியாது.
சண்டை நடக்கும்போது புதிய தளபதி யாரையும் நான் பார்க்கவில்லையே!
பிளாசிடோ! இதில் ஏதோ மர்மம் இருக்கு. அந்த மர்மத் தளபதியை நேருக்கு நேர் சந்திக்க ஒரு தந்திரம் செய்கிறேன். உனது செவ்விந்திய வீரர்களை சட்டையை கழற்றச் சொல். தலைப்பாகையை எடுக்கச் சொல். எதிர்தரப்பு செவ்விந்திய வீரர் போல் ஒரு வெள்ளைக்கார கர்னலை பிடித்துக்கொண்டு போங்க!


அமெரிக்க ஒற்றர் படை செவ்விந்தியர்கள் பிளாசிடோ தலைமையில் வெள்ளைக்கார அதிகாரியை பிடித்துச் சென்றார்கள். அதனால் அவர்களுக்கு எதிர்ப்பு இல்லை!
நமது திட்டம் சரியாக வேலை செய்கிறது.
ஆமா, பிளாசிடோ!


செவ்விந்தியர் வெற்றிக்கு சூத்திரதாரியான ஊனக் கால் தலைவரிடம் அவர்கள் நிறுத்தப்பட்டனர்.
தலைவரே! இவனை விசாரியுங்க! அதன்பிறகு இவன் இதயத்தை வெளியே எடுத்து விடுகிறோம்!
ரெட் கிளா! யார் இவர்கள்?
இவர்களை எனக்கு தெரியவில்லை தலைவரே! நமது படையில் செவ்விந்தியர்கள் சேர்ந்த வண்ணம் இருக்கிறார்கள். அதனால் இந்த வீரர்களை சரியாக இனம் கண்டுகொள்ள முடியவில்லை.

அங்கே கைதியாக வந்தது வேறு யாரும் இல்லை. கார்சன்தான்! ஆம்! டெக்சாஸ் பிரதேசத்தில் செவ்விந்தியர்களின் மர்மத் தளபதியை அவர் நேருக்கு நேர் சந்தித்தார்!
ஏய் நீ யார்? என்னையே ஏன் பார்க்கிறாய்?
நீங்கள் ஒரு மெக்சிகோகாரர்! இல்லையா?
ஆம்! கார்சன் சொன்னது உண்மைதான்! அவர் மெக்சிகோ தளபதி குரூஸ்தான்! அலமோ போருக்குப் பின், 20 ஆண்டுகளாக அவர் உள்ளத்தில் எரிந்த அந்த தீ, அவர் முகத்தில் தெரிந்தது!
நீ அமெரிக்க படையைச் சேர்ந்த நாய்! நீ என்னைப் பற்றி கேட்கிறாய்? நான் யார்? நான் யார்? விரைவில் அமெரிக்கா முழுவதும் அலறப்போகிறது. இந்த குரூஸ்சின் பெயரைக் கேட்டு!

ஜெனரல் குரூசின் இடிமுழக்கத்தை கேட்டு கார்சன் அதிர்ச்சி அடைந்தார்.
குரூஸ்! ஜெனரல் குரூஸ்! அலமோ! அலமோ போர்!
ஆம்! அலமோ! அங்கேதான் ஒரு மூளை உள்ள அமெரிக்க ராணுவ அதிகாரியால் எனது திட்டம் தகர்க்கப்பட்டது. நான் ஊனப் பட்டேன். எனது வெற்றியும், புகழும் சேதப்பட்டது!


செவ்விந்தியர்களின் தற்போதைய தானைத் தலைவர் குருசை, கார்சன் மீண்டும் உற்று பார்த்தார்!
எதிர்ப்படை நாயே! என்னை மீண்டும் முறைக்கவா செய்கிறாய்? என் கால்களைப் பார். டெக்சாஸ் படை பீரங்கியால் ஊனப்பட்ட என் கால்களைப் பார்! என்னை என் மக்களே வெறுக்க காரணம் ஆன என் கால்களைப் பார்! "என் நாடு எனக்குச் சொந்தம். இந்த பூமி, செவ்விந்தியர்களுக்குச் சொந்தம்!" இந்த குரூஸ் அதற்காக அமெரிக்கர்களை எதிர்த்து போர் தொடங்கிவிட்டான்!

குரூஸ் அவர்களே! எனக்கு புரிகிறது!
நாயே! உனக்கு என்ன தெரியும்? கடந்த 20 ஆண்டுகளாக காயப்பட்ட கால்களுடன், ஊனப்பட்ட அபிலாசைகளுடன் மனச் சங்கடப்பட்டு வந்தேன். அது உனக்குப் புரியுமா? செவ்விந்தியர்களின் வெள்ளைக்கார துவேஷம், என் துவேஷத்துக்கு குறைந்தது அல்ல. எனது ராணுவ தந்திரம், பழிக்கு பழிவாங்க வேண்டும் என்ற வெறி எல்லாம் செவ்விந்திய மக்களுடன் இணைந்துவிட்டது!
ஜெனரல் குரூஸ் வெறிபிடித்து பேசிக்கொண்டு இருந்தார்.
குரூஸ் அவர்களே! ஆத்திரம் வேண்டாம். அமெரிக்கர்களை உங்களால் ஒன்றும் செய்ய முடியாது!
முட்டாளே. இப்போதைய வேகத்தில் டெக்சாஸ் முழுவதையும் வெற்றி கொள்வேன். பின் அமெரிக்காவின் வட பகுதியில் செவ்விந்தியர்களின் ஆட்சியை ஏற்படுத்துவேன். கடைசியில் அமெரிக்க கழுகின் இறக்கைகள் ஒடிந்து என் காலடியில் விழும்! அதுவரை ஓயமாட்டேன்! தலை சாயமாட்டேன்!

பேசிக்கொண்டே இருந்த குரூஸ் திடீர் என்று உத்தரவு போட்டார்.
ரெட் கிளா! இவனை இழுத்துச் செல்! பன்றிகளுக்கு இறையாக்கு!
செவ்விந்திய வீரர்களே! இந்த நாயை இப்படியா விட்டு வைப்பது? இவனை என்னிடம் விடுங்க!
ஆபத்தை உணர்ந்த பிளாசிடோ தானும் தாக்கினான். இன்னொருவன் கத்தி முனையில் பிடித்தான்.
தலைவரே ரெட் கிளா! இவனை அழைத்து செல்கிறோம்! நீங்க சொல்லும்போது மரண தண்டனை அளிக்கலாம்!

ரெட் கிளா கொஞ்சம் யோசித்தார். கார்சன் உயிர், அவர் தயவில் ஊசலாடியது. பிறகு அவர் சொன்னார்—
இவனை கொண்டு போய் காவலில் வையுங்க. தப்பிவிட்டால், தொலைந்தீர்கள்.
தலைவர் ரெட் கிளா உத்தரவுப்படி இவனை இழுத்துச் செல்லுங்க!
அதுதான் சமயம் என்று பிளாசிடோ, கார்சனை இழுத்துச் சென்றான். வழியில்...
கார்சன்! உங்களை தாக்கிவிட்டேன்!
பிளாசிடோ! நல்ல வேலை செய்தாய். இல்லை, நாம் தப்பிக்க முடியாது!
கார்சனை, பிளாசிடோ முன் எச்சரிக்கையோடு பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துப் போனான். பிறகு...
பிளாசிடோ! இப்போது எல்லாம் புரிந்துவிட்டது. முரட்டு செவ்விந்தியர்களுக்கு புத்திசாலித்தனமும், போர் தந்திரமும் மிக்க ஒரு பெரிய தளபதி கிடைத்துவிட்டார். இதை வாஷிங்டன் உணரும்படி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் வாஷிங்டன், ஜெனரல் குரூஸ் கையில் சிக்குவது திண்ணம்!

இரண்டு வாரங்கள் ஓடின. அதன்பின் அமெரிக்க தலைநகரான வாஷிங்டனில், ராணுவ மந்திரி அலுவலகத்தில்—
ஒற்றர் தலைவர் கர்னல்... கார்சன் அனுப்பி இருக்கும் அறிக்கை முக்கியமானது. உடனடியா ஒரு பெரும் படையை அங்கே அனுப்பாவிட்டால் பெரிய அபாயம் ஏற்படும்!
செனேட்டர் ஹெர்பட்! நீங்க பாராளுமன்ற உறுப்பினர். உங்களுக்கு தெரியாதா? நாம் இங்கு இருந்து பெரும் படையை அங்கு அனுப்பினால், வழியில் உள்ள பல்வேறு செவ்விந்திய பிரிவினர் சுதாரிப்பார்கள். நமக்கு ஏதோ ஆபத்து என்று நினைத்து குருசுடன் சேருவார்கள்.
ராணுவ மந்திரி கூறியது செனேட்டர் ஹெர்பட்டை யோசிக்கச் செய்தது.
அதே நேரம் செவ்விந்தியர் எழுச்சியை அடக்க வேண்டும். அதற்கு டெக்சாசில் உள்ள படைகளை பயன்படுத்தினால் போதும். ஆனால் மன உறுதியும், நரிக்குணமும் உள்ள ஒரு தளபதி வேண்டும். அதற்கு செனேட்டர் ஹெர்பட்டே பொருத்தமானவர்!

அதைக் கேட்டு, செனேட்டர் ஹெர்பட் அதிர்ச்சி அடைந்தார்.
படை நடத்தும் அளவுக்கு எனக்கு அனுபவம் போதாது!
அப்படி நினைக்க வேண்டாம். கர்னல் கார்சன் உங்களுக்கு பக்க பலமாக இருப்பார். ஜெனரல் குரூஸ்சை அடக்க பொருத்தமான தளபதியை நீங்க தேர்ந்து எடுத்துக்கொள்ளலாம். அவர் யாராக இருந்தாலும் பரவாயில்லை.

ராணுவ மந்திரியின் உத்தரவுபடி செனேட்டர் ஹெர்பட், ரெயில் மூலம் துல்சா என்ற இடம் போனார். அங்கு இருந்து குதிரை வண்டியில் டல்லாஸ் நகர் வந்தார். அங்கே கர்னல் கார்சன் அவரை வரவேற்றார்.
கர்னல் கார்சன்! ரொம்ப முக்கியமான, ரகசியமான விஷயம் பற்றி பேச வந்து இருக்கேன்!
உங்களை ராணுவ மந்திரி அனுப்பி இருக்கிறார் என்றாலே அது முக்கியம் ஆகவே இருக்கும். ஜெனரல் குரூசை அடக்க என்ன திட்டம்?


ஒரு பெரிய ஓட்டலில் செனேட்டர் ஹெர்பட் தங்கினர். பிறகு இருவரும் பேசினர்கள்.
செனேட்டர் அவர்களே! ஜெனரல் குருசும், அவரது படையினரும் இப்போது வடக்கு பக்கமாக வந்துகொண்டு இருக்கிறார்கள். பவ்னி எல்லையை அவர்கள் கடந்து வந்துவிட்டால் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது.
அது சரி, கார்சன்! ஜெனரல் குருசை எதிர்த்து முறியடிக்கக்கூடிய சக்திவாய்ந்த தளபதி நமக்கு தேவை. அதற்கு தேவையான யாரையும் நீங்க தேர்ந்து எடுங்க. டெக்சாஸ் முழுவதும் உள்ள அமெரிக்க படையை அவர் தலைமையின் கீழ் கொண்டுவர நான் ஏற்பாடு செய்கிறேன்.


அதைக் கேட்ட கார்சன் உடனே எழுந்து புறப்பட்டார்.
கார்சன்! என்ன புறப்பட்டு விட்டீர்கள்? புதிய தளபதி யார்? நீங்க தேர்ந்து எடுக்க வேண்டாமா?
நான் தேர்ந்து எடுத்துவிட்டேன். அவர் பெயர் ஆலிவர் பிராண்ட்!

அடுத்த விநாடியே கர்னல் கார்சன் புறப்பட்டார். போலோ பிந்தோ பகுதியில் மாட்டுப் பண்ணை—பன்றிப் பண்ணை நடத்திக்கொண்டு இருக்கும் ஆலிவரை பார்க்க அவர் விரைந்தார்!

மறுநாள் அவர், அந்த பண்ணையை அடைந்தபோது ஆலிவர் ஒரு மாட்டை பிடித்துக்கொண்டு இருந்தார்! 20 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க 16-வது குதிரைப் படையை வழி நடத்திய ஆலிவர் இப்போது வித்தியாசமாக காணப்பட்டார்.
ஏய்! நீ கார்சன்தானே? என்ன இவ்வளவு தூரம்?
கர்னல் ஆலிவர் அவர்களே! விதி என்னை இங்கே கொண்டு வந்து உள்ளது!


பிறகு கார்சன், தான் வந்ததன் காரணத்தை விளக்கினார்.
கர்னல் ஆலிவர் பிராண்ட் அவர்களே! குதிரைப் படை காத்து இருக்கிறது! உங்களால்தான் வெற்றியை தேடித்தர முடியும்!
ஓகோ! இப்போது நான் அவர்களுக்கு தேவைப்படுகிறேன் இல்லையா?
20 ஆண்டுகள் ஆகியும் கூட, ஆலிவர் பிராண்ட் மனதில் ரணம் ஆறவில்லை.
ஜெனரல் குரூஸ் பற்றி நானும் கேள்விபட்டு இருக்கிறேன். இந்த பண்ணையை அவர் தாக்கினால், நான் எதிர்ப்பேன். என் மீது ராணுவ கோர்ட் விசாரணை வைத்த ராணுவத்துக்கு நான் தலைமை தாங்க மாட்டேன்!
20 ஆண்டுக்கு முன் நடந்ததை நீங்க மனதில் வைக்கக்கூடாது!
20 ஆண்டுகள் என்பது நீண்ட காலம்தான். ஆனால் என் மனக் கொதிப்பு அடங்கவில்லையே. அலமோ யுத்தத்தில் நம் படைகளை நான்தான் காப்பாற்றினேன். அதற்காக எனக்கு அளிக்கப்பட்ட பரிசு கோர்ட் விசாரணை—அவமானம்—அபகீர்த்தி—இல்லையா? இந்நேரம் ராணுவ ஜெனரலாக இருந்து இருக்கவேண்டிய நான் மாடு மேய்த்துக்கொண்டு இருக்கிறேன்!

ஆலிவருடன் வாதம் செய்வதால் பலன் இல்லை என்பதை உணர்ந்த கார்சன், வேறு உபாயத்தை கையாண்டார்.
சரி! உங்களுக்கு விருப்பம் இல்லை என்றால் விட்டுவிடுங்கள்! நீங்க மீண்டும் ராணுவ தலைமை பொறுப்பை ஏற்றால் உங்க மகனைப் பார்க்கலாம்!
என் மகன் ஸ்டீபன் ராணுவத்திலா இருக்கான்? அவனை உடனே பார்க்க வேண்டும்! அவனைப் பார்க்க உன்னுடன் வருகிறேன்! ராணுவத்தில் சேர அல்ல!
ஸ்டீபன் இருக்கும் ராணுவ முகாமுக்கு அழைத்து போவதாக கூறிய கார்சன், ஆலிவரை, செவ்விந்தியர்கள் தாக்கி நிர்மூலமாக்கிய வெள்ளைக்காரர்கள் காலனிகள் வழியாக அழைத்துச் சென்றார்!
கார்சன்! இதை எல்லாம் பார்த்தபிறகு, நான் மனம் மாறி அமெரிக்க ராணுவத்தில் சேருவேன் என்று நினையாதே! நான் என் எதிரிகளை மன்னிப்பது கிடையாது!


வழியில், செவ்விந்தியர்களால் சின்னாபின்னப் படுத்தப்பட்ட சப்ளை வண்டிகள் கிடந்த இடத்தில் இருவரும் இறங்கினர்.
செவ்விந்திய பேய்கள் கோர தாண்டவம் ஆடி உள்ளன! அவர்களை...! உம்...அதனால் எனக்கு என்ன? நான் ஒரு பண்ணை அதிபர். இது ராணுவத்தின் சம்பந்தப்பட்ட விஷயம். கார்சன் வா, போகலாம்!

அதன்பிறகு ஆலிவருடன் கார்சன் பேச்சு கொடுக்கவில்லை. அன்று மாலை இருவரும் "போர்ட் வொர்த்" என்ற கோட்டையை அடைந்தனர். அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு ஆலிவரை கார்சன் அழைத்து சென்றார்.
கர்னல்! உள்ளே போவோம்!
நான் கர்னல் இல்லை, கார்சன்! அதை மறந்துவிடாதே! ஆமா, என்னை எங்கே அழைத்து செல்கிறாய்?
SOUTH-WEST COMMAND-
COMMAND-
BASE-HOSPITAL


அது ராணுவ ஆஸ்பத்திரி. போரில் காயம் அடைந்த வீரர்கள் உள்ளே நிறைந்து இருந்தனர்.
இவர்கள் எல்லாம் சமீபத்தில் செவ்விந்தியர்களுடன் நடந்த சண்டையில் படுகாயம் அடைந்தவர்கள். பலர் இறந்துவிட்டனர். ஒரு முட்டாள் தளபதி, செவ்விந்தியர் விரித்த வலையில் இவர்களை சிக்க வைத்துவிட்டார்!


செவ்விந்தியரின் தாக்குதலுக்கு பலியாகி அங்கே சிகிச்சை பெற்று வரும் அமெரிக்க வீரர்களைப் பார்த்ததும், ஆலிவர் மனம் கொஞ்சம் இளகியது.
இவர்கள் எல்லாம் தைரியமான இளைஞர்கள்! உயிருக்கு அஞ்சாத வீரர்கள்! சரியான தளகர்த்தர் இல்லாமல், இவர்கள் பலியிடப்பட்டு விட்டார்கள். இவர்களுக்கு ஒரு நல்ல தளபதி தேவை!
கார்சன்! நீ என்ன சொல்கிறாய்?


பேசிக்கொண்டே அவர்கள், ஆலிவரின் மகன் ஸ்டீபன் படுத்து இருந்த படுக்கைக்கு வந்தனர்.
இவன்தான் உங்கள் அருமை மகன்!
ஸ்டீபன்! உனக்கும் காயமா?
அப்பா! உங்களை பார்ப்பதில் மகிழ்ச்சி. நீங்க சொல்வது நியாயமே. ஆனால் கடந்த காலத்தை மறந்துவிடுங்க. ஒரு ஜெனரல் செய்த தவறுக்கு, பல ஆயிரம் வீரர்கள் பலியாக வேண்டுமா? உங்க தலைமைக்கு வீரர்கள் காத்து இருக்காங்க!

காயம் அடைந்த மகன் கூறியதைக் கேட்டு ஆலிவர் மனம் மாறினர்.
கார்சன்! வெற்றி உனக்கே!

20 ஆண்டுகளாக ஆலிவர் ராணுவ பயிற்சி இல்லாவிட்டாலும், பண்ணை அதிபராக கடுமையாக உழைத்து உடலை உரம் ஏற்றி வைத்து இருந்தார். இரண்டே நாளில் அவர் போருக்கு தயார் ஆனார்!


செவ்விந்தியர் மீது அவர் திடீர் தாக்குதல் நடத்தினார். அந்த கொரில்லா போரை செவ்விந்தியர்கள் எதிர்பார்க்கவே இல்லை!

ஆலிவர் தலைமையில் அமெரிக்க வீரர்கள் உற்சாகம் அடைந்தனர். செவ்விந்தியர் குடி இருப்புகளை அதிகாலை நேரங்களில் திடீர் திடீர் என்று தாக்கி நிலைகுலையச் செய்தனர்.

இதற்கு இடையில் ஜெனரல் குரூஸ், செவ்விந்தியத் தலைவர் ரெட் கிளாவுடன் ஆலோசனை நடத்தினர்.
ரெட் கிளா! அமெரிக்க படைகளுக்கு ஆலிவர் தலைமை ஏற்று உள்ளான். நாம் வடக்கு புறம் போவோம். அங்கே பூமி இதைவிட வளமானது.
டெக்சாஸ் எங்கள் பூமி. இதைக் காலி செய்துவிட்டு போகச் சொல்கிறீர்களா?



இரண்டு மாதம் நடந்த திடீர் தாக்குதல் கொரில்லா போரில், அமெரிக்க படைக்கு பல வெற்றிகள் கிடைத்தன.
"மோடாக்" இனத்தவரின் இந்த குடியிருப்பு நம் கைவசம் ஆனது!
இது போதாது கார்சன்! குரூஸ்சை பிடிக்க வேண்டும். அவரது முழு படையையும் சிதற அடிக்க வேண்டும்! அதனல் வடபுறமா படை எடுப்போம்!



3 மணி நேரம் கழித்து கர்னல் ஆலிவரும், கார்சனும் பாலைவனம் வழியாக வடபுறம் புறப்பட்டு போனர்கள். வழியில்...
ஜெனரல் குருசை கொன்றுவிட்டால், செவ்விந்தியர்கள் சிதறிவிடுவார்கள். ஆனல் குருசை அவ்வளவு எளிதில் பிடிக்க முடியாது. அவரை மறைவு இடத்தில் இருந்து வெளியே வரச் செய்ய வேண்டும். அந்த குன்றுகளைப் பாருங்க!
அந்த குன்றுகளுக்கு பேய் சிகரம் என்று பெயர்!



கர்னல் ஆலிவர் மூளையில் ஒரு அற்புதமான திட்டம் உருவாகி இருந்தது.


6 நாள் கழித்து, செவ்விந்தியர்களின் ரோந்துப் படை, அமெரிக்க முகாமை பார்த்தது.
பேய் சிகர பள்ளத்தாக்கில் வெள்ளை வீரர்கள்!
உடனே போய் ஜெனரல் குருசிடம் சொல்வோம்!


ரோந்து படையினர், ஜெனரல் குருசிடம் வந்து விவரம் கூறினர்.
ஓகோ! கர்னல் ஆலிவருக்கு பேராசை!
நாளை சூரிய உதயத்தில் அந்த முகாமை தாக்குவோம்! ஒருவர் விடாமல் கொல்வோம்.
கர்னல் ஆலிவரை பிடித்து வந்து தூக்கில் தொங்க விடுவோம்!

அன்று இரவு செவ்விந்தியர் தீ மூட்டி யுத்த நடனம் ஆடினர். ஜெனரல் குரூஸ் மகிழ்ச்சியாக காணப்பட்டார்.
நாளை காலை அமெரிக்க வீரர்கள் அனைவரும் யுத்த, தேவதைக்கு பலி இடப்படுவார்கள். ஆலிவர் இவ்வளவு முட்டாளாக இருப்பான் என்று நான் நினைக்கவில்லை!


மறுநாள் அதிகாலை. செவ்விந்தியர்கள் படை எடுத்தனர்.

படை வீரர்களுக்கு ரெட் கிளா தலைமை தாங்கினார்.
உம்! பாய்ந்து தாக்குங்க!


செவ்விந்திய முரட்டு வீரர்கள் பாய்ந்து வந்த அதே நேரத்தில் அமெரிக்க முகாமில்...
கர்னல் எல்லாம் தயார்!
உம்! நாம் புறப்படுவோம்!


செவ்விந்தியர்கள் பறந்து வரும்போது, அமெரிக்க வீரர்கள் வாபஸ் ஆகி போய்க்கொண்டு இருந்தனர்!


அமெரிக்க படையினர் செய்த தந்திரம் தெரியாமல், அவர்கள் வைத்த மரணப் பொறியில் சிக்க, செவ்விந்திய வீரர்கள் பாய்ந்து வந்தனர்.
கோழைகள் ஓடுகிறார்கள்! முகாம் நமக்கே!

ஒரு குன்றின் மீது கார்சனும், அவரது செவ்விந்திய ஒற்றர் படையினரும் நின்றுகொண்டனர். கர்னல் ஆலிவரும் அவரது படையினரும் அங்கிருந்து புறப்பட்டனர்.
கார்சன்! முகாமை அவர்கள் பிடித்துக்கொண்டனர்! இப்போது ஜெனரல் குருசை கீழே கொண்டு வருகிறார்கள். 3 நிமிடம் பொறு. அதிர்ஷ்டம் உன் பக்கமே!
நீங்கள் போங்க. பிறகு சந்திக்கிறேன்!


20 ஆண்டுகளுக்கு முன், டெக்சாஸ் படையினரின் பீரங்கி குண்டு தாக்குதலால், கால் ஊனம் அடைந்த குரூஸ் வெற்றி எக்காளத்தில் போய்க்கொண்டு இருந்தார்.
அமெரிக்காவின் தென் மேற்கு பகுதி இப்போது என் வசம். டெக்சாஸ் பகுதியும் பிடிபட்டுக் கொண்டு இருக்கிறது! அடுத்த இலக்கு வாஷிங்டன்தான்!

ஒரு குன்றின் மறைவில், தன் செவ்விந்திய ஒற்றர் படையுடன் மறைந்து இருந்த கார்சன் உத்தரவு போட்டார்!
உம்! தாக்குங்க!


சில வீரர்களுடன் தனியே இருந்த குரூசை நோக்கி அந்த ஒற்றர் படை பாய்ந்தது.
கையில் தீப்பந்த அம்புகளுடன் வரும் இவர்கள் யார்?

பாய்ந்து வந்த அந்த வீரர்கள் கண் இமைக்கும் நேரத்தில் கூடாரங்களின் மீது தீப்பந்த அம்புகளை செலுத்தினர்.
எல்லா முகாம்களையும் கொளுத்துங்க!

ஏற்கனவே முகாம் துணிகளில் அமெரிக்கப் படையினர் மண்எண்ணையை தெளித்து இருந்ததால், தீ திபுதிபு என்று பிடித்து பரவியது. குரூஸ் கதறினார்.
எங்கே என் வீரர்கள்? என்னை தனியாக விடாதீர்கள். காப்பாற்றுங்க! காப்பாற்றுங்க!

ஜெனரல் குருசின் அபயக் குரல் கேட்டு, அந்த இடம் நோக்கி ஒற்றர் படை தலைவர் கார்சன் விரைந்தார்.


ஆனால் அதற்குள் முகாம் துணி முழுவதும் பற்றிக்கொண்டு அவர் மீது விழுந்ததால், அவர் தீக்குளித்தார்.

ஜெனரல் குரூஸ் தீக்கு இரை ஆகிய அதே நேரத்தில், அமெரிக்க கர்னல் ஆலிவரின் குதிரைப் படை அங்கே மின்னல் வேகத்தில் வந்தது.
ரெட் கிளாவை விடாதே!
சுற்றிலும் தீ! தலைவர் குரூஸ் வேறு இறந்துவிட்டார்! அமெரிக்கப் படை திரும்பி வந்து தாக்குகிறதே!


செவ்விந்திய வீரர்கள் சிலர் சண்டை போட்டு மாண்டனர் சிலர், பாலை
வனத்தில் ஓடி உயிர் தப்பினர். சிலர் சரண் அடைந்தனர்.


எங்கும் தீ. மரண ஓலம். அமெரிக்க தரப்புக்கு வெற்றியுடன் போர்
முடிந்தது. வெற்றி வீரர்களான ஆலிவரும், கார்சனும்
கருகி கிடக்கும் குருஸ் பிணத்தை பார்த்தனர்.
உம்! கார்சன்! குருசின் சரித்திரம் முடிந்துவிட்டது!

ஒரு வாரம் கழித்து ஆலிவரின் வெற்றிப் படை "போர்ட் வொர்த்" என்ற கோட்டைக்கு வந்தனர். ஆலிவரை செனேட்டர் ஹெர்பட் வரவேற்றார்.



அப்போது கார்சனும், அவரது ஒற்றர் படையினரும் அங்கு வந்தனர்.



முற்றும்.

ராணி சிண்டிகேட் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர்: எஸ்.ராமஜெயம், 1091,பெரியார் நெடுஞ்சாலை,சென்னை–600 007.
அச்சிட்டவர்: சி.கல்யாணசுந்தரம்,ராணி அச்சகம்,1091,பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

பழிக்குப் பழி!

"பழிக்குப் பழி" முழு நீள சித்திரக் கதையில், "டான்"னின் தம்பி பீட்டர் இறந்துவிட்டான் என்றுதான் எண்ணினேன். கடைசியில் உயிருடன் இருப்பது சுவையான சஸ்பென்ஸ்!

—பி. குமரேஸ்வரன், ஜோதி நகர், சென்னை–19.

—சி. சுரேஷ் குமார், காரிமங்கலம்.

—"சங்கு", சிங்காரப்பேட்டை.

சிறந்த கதையம்சம், எதிர்பாராத திருப்பம், அருமையான கதாபாத்திரங்கள் இத்தனையும் கொண்ட "சூப்பர்" கதை பழிக்குப் பழி! —ஏ. அப்துல் முனிர், ஓசூர்–9.

தன் தாய் — தந்தையரை கொன்றவர்களை பழிவாங்க டானுக்கு சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும், அதே மாதிரி குற்றவாளிகளை அவன் பழிவாங்குவது படு விறுவிறுப்பு!

—எஸ். இலட்சுமணன், மதுரை–9.

—வளர்மதி குணசேகரன், வாழ்வான்குன்றம்.

"பழிக்குப் பழி!" நிமிடத்துக்கு நிமிடம் விறுவிறுப்பு. காமிக்ஸ் கடலில் அது "டான்" முத்து!

—செ. தமிழ்செல்வி மின்சிவா, நாகர்கோவில்–1.

தாய்—தந்தையரை கொலை செய்தவர்களை பழிவாங்கும் எண்ணம் யாருக்குதான் வராது?

—ஆர். வாசுதேவன், மாட்டுகான்புதூர்.

எஸ்டேட் பேய்!

இதுவரை நான் படித்த தொடர்கதைகளில், ராம்ஜியின் "எஸ்டேட் பேய்"தான் திகில், திருப்புமுனை, ஆர்வம் அத்தனையும் கொண்டு நெஞ்சை படபடக்க வைக்கிறது.

—செ. வ. ரவி, சைதாபேட்டை, சென்னை–15

உண்மையிலேயே பேய் கதை விடுவதில் (எழுதுவதில்) "மகாராஜா" ராம்ஜிதான்!

—ஸ்ரீலேகா, சந்தரமவுலி, பெரியார் மாவட்டம்.

"எஸ்டேட் பேய்" ஒரு திகில் தொழிற்சாலை!

—ஜெய்மன், திருச்சி–21.

—எஸ். பார்த்தசாரதி, பண்ணம்பட்டி.

"எஸ்டேட் பேய்!" பயங்கர திகில் கதை என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால் ராம்ஜி பயங்கரமாக காதில் பூவையும் சுற்றுகிறார்! —பி. தனலட்சுமி சங்கர், சென்னை–9.

"எஸ்டேட் பேய்" கதை ஒவ்வொரு வரியும் ரத்தத்தை உறைய வைக்கிறது. —எஸ். பிரேமா, சிறுகமணி.

—கு. மணிகண்ட பூபதி, உத்தமபாளையம்.

ரூ. 50- பரிசு: கருத்துப் போட்டி-22

"மரக் கோட்டை" சித்திரக் கதையை படித்துவிட்டீர்கள் அல்லவா? இனி இந்தக் கதையில், உங்கள் மனதைக் கவர்ந்த சம்பவம் எது? அதற்கான காரணம் என்ன? என்று உங்கள் கருத்தை, "ராணி காமிக்ஸ்", ஒரு பக்க அளவுக்கு மிகாமல், எழுதி அனுப்புங்கள்.

மிகச் சிறந்த கருத்துக்கு ரூ. 50 பரிசு வழங்கப்படும்.

தேர்ந்து எடுக்கப்பட்ட கருத்து, 15–10–85 இதழில் பிரசுரிக்கப்படும்.

கருத்துப் போட்டி நிபந்தனைகள்:—

(1) கருத்துக்கள் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி தேதி 25–9–85. அதன்பின் வரும் கருத்துக்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(2) போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு வயது வரம்பு கிடையாது.

(3) போட்டியில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது.

(4) கீழே உள்ள பாரத்தை பூர்த்தி செய்து, "கருத்து"டன் சேர்த்து அனுப்ப வேண்டும். அது இல்லாமல் வரும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

ராணி காமிக்ஸ்

முகவரி:—
கருத்துப் போட்டி,
"ராணி காமிக்ஸ்",
1091, பெரியார்
நெடுஞ்சாலை,
சென்னை–600 007.

கருத்துப் போட்டி எண்: 22

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

போட்டி நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்.

....

(கையொப்பம்)

மேகம் முன்...

பள்ளிக்கூட தேர்தல்
VOTE ME
"என்னை தேர்ந்து எடுத்தால், உலக சமாதானத்துக்கும், அணுகுண்டு ஒழிப்புக்கும் அயராது பாடுபடுவேன்!"
காவல் நிலையம்
WANTED
சப்-இன்ஸ்பெக்டரே! நான் மேடையில் பேசும்போது என் மீது வீசப்பட்ட கற்கள்—செறுப்புகள் இவை. கைரேகை எடுத்து குற்ற-வாளிகளை கண்டுபிடியுங்கள்!
கட்சி அலுவலகம்
இதோ ஒரு வாழைப்பழ தோல். இது எதிர் கட்சியினரின் சதி வேலைதான்! சந்தேகம் இல்லை!
புத்தக கடை
என் மகனை நர்சரி பள்ளிக் கூடத்தில் சேர்த்ததில் அவ்வளவு பணமும் காலியாகிவிட்டது. புத்தகம் வாங்க பணம் இல்லை. அதனால்தான்...சாரி...!

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7